refugee action
working with refugees to build new lives

information

# Section 4 NASS* ஆதரவு

## யாருக்கு Section 4* ஆதரவளிக்கிறது?

பின்வரும் அனைத்தும் பொருந்துமானால் Section 4* கீழ் ஆதரவு பெறுவதற்கு நீங்கள் தகுதி பெறக்கூடும்:

- நீங்கள் ஓர் அடைக்கலம் தேடுபவராக இருத்தல் மற்றும்
- உங்கள் அடைக்கல கோரிக்கை மறுக்கப்பட்டிருத்தல் மற்றும்
- உங்களுக்கு வேறு எவ்வகையான ஆதரவும் இல்லாத நிலை
- நீங்கள் மேல் முறையீடு செய்திருந்தால் உங்களுக்கு ஆதரவு பெறுவதற்குத் தகுதி உண்டு. தயவுசெய்து எங்களிடம் கேட்கவும்.

மற்றும் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்று பொருந்துமானால்:

- நீங்கள் ஏற்கனவே (உங்கள் தூதரகம்/குடிவரவு சேவையிடமிருந்து) பயண ஆவணங்களுக்கு விண்ணப்பம் செய்திருத்தல் அல்லது சுயவிருப்பத்தின்பேரில் திரும்பிச் செல்வதற்கு பதிவு செய்துவிட்டு, திரும்பிச் செல்வதற்குமுன் பயண விவரங்கள் முடிவு செய்யப்படுவதற்காகக் காத்திருத்தல்
- மருத்துவ காரணங்களை முன்னிட்டு உங்களால் யூகே-யைவிட்டு வெளியே பயணம் மேற்கொள்ள முடியாத நிலை
- உங்கள் நாட்டிற்கு நீங்கள் திரும்பிச் செல்லக்கூடிய பாதுகாப்பான வழி இல்லை என்று Home Office* தெரிவித்தல்
- உங்கள் அடைக்கல கோரிக்கை தொடர்பாக நீங்கள் ஒரு Judicial Review* எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருத்தல்
- ஆதரவு இன்றி உங்கள் மனித உரிமைகள் மீறப்படுவதாக உள்துறை அலுவலகம் கூறுதல்- உதாரணமாக உங்கள் அடைக்கல கோரிக்கையின் மீது உங்கள் வழக்குரைஞர் further representations* அளித்திருத்தல் அல்லது நீங்கள் காவலில் இருக்கும் காரணம்

## Section 4* ஆதரவு என்றால் என்ன?

- பொதுவாக உணவு மற்றும் சுகாதார பொருட்களுக்காக வாரத்திற்கு 35 பவுண்டு மதிப்புள்ள பணச்சீட்டுடன் NASS* அளிக்கும் தங்குமிட வசதி
- கூடுதல் பண உதவி எதுவும் கிடையாது
- தங்குமிடம் நீங்கள் அனுப்பப்பட்டிருக்கும் பகுதியில் இருக்கக்கூடுமென்றாலும், உங்கள் தற்போதைய தங்குமிடத்திலிருந்து நீங்கள் வெளியேற வேண்டியிருக்கலாம்
- மேற்குறிப்பிட்ட தகுதிகளை நீங்கள் பூர்த்தி செய்கிறீர்களா என்பதை NASS* அவ்வப்போது கண்காணிப்பதுடன், நீங்கள் தவறும்பட்சத்தில் ஆதரவை நிறுத்திவிடக்கூடும் (உதாரணமாக, சுயவிருப்பத்தில் திரும்பிச்செல்லும் விண்ணப்பத்தை நீங்கள் திரும்பப் பெற்றுக் கொண்டால், உங்களுக்கு அளிக்கப்படும் ஆதரவு ரத்து செய்யப்படும்)

## நான் எப்படி விண்ணப்பிக்க வேண்டும்?

- உங்களுக்கு அருகாமையில் உள்ள ஆலோசனை அமைப்பிற்கு செல்லவும் - அவர்கள் NASS*க்கு விண்ணப்பிப்பதற்கான படிவத்தை பூர்த்தி செய்வதற்கு உங்களுக்கு உதவக்கூடும்.
- நீங்கள் Section 4* ஆதரவுக்கான விதிகளை புரிந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிடும் படிவம் ஒன்றில் கையொப்பமிடும்படி NASS* உங்களைக் கேட்டுக் கொள்ளும் - இவற்றை நாங்கள் உங்களுக்கு விளக்குவோம்.
- நீங்கள் விண்ணப்பித்தவுடன், NASS* உங்களுக்கு Section 4* ஆதரவை அளிக்குமா என்பதை அறிவதற்கு சிறிது காலம் ஆகக்கூடும்.
- NASS* உங்களுக்கு Section 4* ஆதரவை அளித்தாலும், தங்குமிடத்திற்கு செல்வதற்கு உங்களுக்கு மேலும் ஒருவார காலம் ஆகக்கூடும்.

* இச்சொற்கள் மொழிபெயர்ப்பு செய்ய இயலாத நிறுவனங்களின் ஆங்கிலப் பெயர்கள் அல்லது பிறவகை சொற்களாகும். இவற்றின் பொருள் என்ன என்பதை அறிவதற்கு தயவுசெய்து ஓர் ஆலோசனை பணியாளரை விளக்கும்படி கேட்கவும்.

**உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலைகள் இருப்பின் தயவுசெய்து கேட்கவும்.**